வேண்டியவர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது என்றும் நீண்ட காலமாக கட்டிடம் கட்டி முடிக்காமல் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அதற்குக் காரணம் என்ன? (குறுக்கீடு) முன்னுள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் . . .

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, முன்னுள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் உறவினருக்குக் கொடுக்கப்பட்டது என்கிற தகவல் இல்லை. மதிப்பீடு 1962-ல் தயாரிக்கப்பட்டது. நெருக்கடி நிலை காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. பிறகு 1965-ல் அனுமதி வழங்கப்பட்டது. அப்பொழுது மேலும் அது திருத்தி, அறைகள் புதிதாக ஏற்படுத்தவேண்டும் என்ற காரணத்தால், திருத்த மதிப்பீடு செய்யப்பட்டதால், அந்தச் செலவு அதிகமாகியிருக்கிறது.

மு.ப. 9-30 திரு. எஸ். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் கட்டுவதற்காக முதலில் மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு? கட்டடம் கட்டி முடிக்கப்படுவதற்காக இப்போது ரிவைஸ்டு எஸ்டிமேட்டின்படி மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, முதலிலே 18.8 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கதர் அங்காடிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு 15—3—1959-ல் திட்டமிடப்பட்டது. பின்னர் திருத்திய மதிப்பீடுகளின்படி நிலங்களைக் கையகப்படுத்தவும், சென்டேஜ் சார்ஜ் முதலியவற்றிற்காகவும் சேர்த்து செலவிடப்பட்ட தொகை 76,93,157 ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திருப்பூர் நகரசபை முன்பு 'கேரோ'

* 168 வின.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

30—3—1968-ல் திருப்பூர் நகரசபை முன்பாக 100-க்கு மேற்பட்ட பெண்கள் காலிக் குடங்களைக் கையிலேந்தி நகரசபை உறுப்பினர்களை வெளியே செல்லவிடாது 'கேரோ' செய்தனரா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே; சென்னையிலே கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. திருப்பூரிலே நடைபெற்றதுபோல் சென்னையிலே நடைபெறாமல் தடுப்பதற்கு, சென்னையில் அதிக அளவில் தண்ணீரை சப்ளை செய்வதற்கு விசேஷ நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது பற்றி நேற்றைய தினம் பொதுநலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் ஓர் விளக்க அறிக்கை வைத்தார்கள். அதில் எல்லாம் அடங்கியிருக்கின்றன.

1969 பிப்ரவரி 28]

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக 1 கோடியே 8 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டத்தைப் போட்டார்கள். 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தல் காலமாக இருந்ததால் ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் செலவழிக்காமல், அவசரம் அவசரமாகத் திட்டத்தை முடித்து, ஜனவரி மாதம் 15-ம் தேதியே தண்ணீர் வழங்க ஆரம்பித்து விட்டார்கள். தற்போது தண்ணீர்ப் பற்றுக்குறை இருக்கிறது. ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்படாததற்கு முன்னுல் இருந்த ஆட்சியும் காரணம் என்பதை இந்த அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதுவும் காரணமாக இருக்கலாம், கொடுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்படாததால் ஏற்பட்ட காரணமாகவும் இருக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, கோவையிலே கூட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊரைப்பற்றிக் கேட்க ஆரம்பித்துவிடக் கூடாது. மூலக்கேள்வியை யொட்டி துணைக் கேள்விகள் கேட்க வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, திருப்பூரில் குடிதண்ணீர் திட்டத்திற்காக 1 கோடியே 8 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இம் மாதிரி நகரசபைகளுக்கு ஒதுக்கப்படும் தொகை, உரிய நேரத்தில் ஒதுக்கிய தொகை முழுவதும் சரிவர செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க தேவையான உத்தரவுகளை பிறப்பிக்க அவ்வப்பொழுது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, தேவையான உத்தரவுகளை அரசு அவ்வப்பொழுது பிறப்பித்து வருகிறது. கும்பகோணம் நகரசபைத் தலைவர் அவர்களைப்போல மற்ற நகரசபைத் தலைவர்களும் விழிப்போடு இருந்து பணியாற்றினுல், அரசு ஒதுக்கிய பணத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளலாம். தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களில் அரசாங்கம் தேவையான இடைக்கால நிவாரணம் கொடுத்து, தண்ணீர்த் தட்டுப்பாட்டை போக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, குடிதண்ணீர்த் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக திருப்பூர் நகரசபைக்கு எவ்வளவு பணம் ஒதுக்கித் தந்திருக்கிறுர்கள்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட தொகை வழங்கப்பட்டிருக்கிறது.